# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.55/2024

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வெங்கடேசன் | மதம் | : இந்து |
| த/பெ | : முனிரத்தினம் | ஜாதி | : -- |
| வயது | : 53 | கிராமம் | : வீரகநல்லூர் மோட்டூர் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**12.11.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்தின் புல எண் என்ன என்றால் புல எண்.18/18 ஆகும். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் சுமார் 60 செண்ட் இருக்கும். வழக்கு சொத்திற்கு பட்டா உள்ளதா என்றால் என் பெயரில் உள்ளது. பட்டாவில் 60 செண்ட் என்று உள்ளதா என்றால் A, B என உள்ளது. 60 செண்ட் இருக்கும். நான் 18/18 என சொல்லும் தாவா சொத்திற்கு விஸ்தீரணம் 32 செண்ட் என எனது பிராதிலேயே குறிப்பிட்டுள்ளேன் என்றால் புல எண்.18/18 A, B, C, D, E என 5 பிரிவாக உள்ளது. அவ்வாறு 5 பிரிவாக உள்ளது என்பதை நான் எனது வழக்கில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து எனக்கு எப்படி கிடைத்தது என்றால் என் அப்பா, பாட்டன் காலத்தில்இருந்து பூர்வீகமாக கிடைத்தது ஆகும். என் அப்பா எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார்.

2. வழக்கு சொத்து மட்டும் எழுதி வைத்தாரா வேறு சொத்துக்களும் எழுதி வைத்தாரா என்றால் வேறு சொத்துக்களும் சேர்த்துதான் எழுதி வைத்தார். தான செட்டில்மெண்டில் உள்ள சொத்துக்கள் அனைத்திற்கும் என் பெயரில் பட்டா மாறிவிட்டது என்றால் ஆமாம். அதில் 118/21 என்ற சொத்தும் அடக்கம் என்றால் ஆமாம். இந்த வழக்கில் உள்ள தாவா சொத்தில் நான் சவுக்கு நடுவதை பிரதிவாதி ஆட்சேபணை செய்ததாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம்.

பிரதிவாதிக்கு எங்கள் நிலத்திற்கு அருகில் அவர்களுக்கு நிலம் உள்ளது என்றால் ஆமாம். புல எண். 118/19, 118/20 என்பது பிரதிவாதி நிலம் என்றால் சரிதான். பிரதிவாதி அவர்களது நிலத்தை வேறு ஒருவரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான்.

3. எனது நிலத்தின் எல்லையை வரையறுத்து காட்ட நான் நிலஅளவை எதுவும் செய்தேனா என்றால் இல்லை. என் நிலத்தின் எல்லை எதுவரை உள்ளது என்பது எனக்கு எப்படி தெரியும் என்றால் வரப்பு வைத்து சொல்கிறேன். நான் பட்டா மாற்றும்போதாவது எனது நிலத்தின் எல்லையை வரையறுத்து காட்ட நான் நிலஅளவைக்கு நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. என் அப்பா பெயரில் இருந்து என் பெயருக்கு பட்டா வந்தது. நான் என் பெயருக்கு பட்டா வந்த பின்பாவது எனது நிலத்தின் எல்லையை வரையறுத்து காட்ட நான் நிலஅளவை எதுவும் செய்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கு பின்பாவது நீதிமன்றம் மூலமாக எனது நிலத்தின் எல்லையை வரையறுத்து காட்ட நான் நீதிமன்ற ஆணையர் நியமணத்திற்கு நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை.

4. பிரதிவாதி கிரையம் வாங்கிய பின்பு பலமுறை நிலஅளவை செய்ய முயற்சி செய்தார்கள் என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் பிரதிவாதி கிரையம் வாங்கிய பின்பு பலமுறை நிலஅளவை செய்ய முயற்சி செய்தபோது நான் ஆட்சேபணை செய்து நிறுத்திவிட்டேன் என்றால் அவர்கள் நிலஅளவை செய்யவில்லை. எங்கள் நிலத்தின் வழியாக உள்ள வழியில் அவர்கள் சென்று வருவதால் அவர்கள் நிலஅளவைக்கு நடவடிக்கை எடுக்கவில்லை. பிரதிவாதி கிரையம் வாங்கிய பின்பு பலமுறை நிலஅளவை செய்ய முயற்சி செய்தார்கள் என்றாலும் நான்தான் அதை தடை செய்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. எங்கள் ஊரில் கண்ணப்பன் மகன் வெங்கடேசனுக்கும் பிரதிவாதி நிலத்திற்கு அருகே நிலம் உள்ளது என்றால் ஆமாம்.

5. நானும் எங்கள் ஊரில் உள்ள கண்ணப்பன் மகன் வெங்கடேசனும் சேர்ந்து பிரதிவாதிக்கு சொந்தமான புல எண்.118/19, 118/20 ஆகிய நிலங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளோம் என்றால் அவர் கிரையம் வாங்கும் முன்பே அளந்து பார்த்திருக்கவேண்டும். கிரையம் வாங்கி 20, 30 வருடங்கள் கழித்து தற்போதுதான் அளக்க முயற்சிக்கிறார். கடந்த 2022 ஆகஸ்ட் மாதம் நான் சவுக்கு நட முயற்சித்தபோது

நான் ஆக்கிரமிப்பு செய்த விவரம் தெரிந்து பிரதிவாதி ஆட்சேபணை செய்தார் என்றால் ஆட்சேபணை செய்யவில்லை. சவுக்கு நட்டபின்புதான் போன வருடம் ஆட்சேபணை செய்தார். 2024ம் வருடத்தில் சவுக்கு நடும் போதும் பிரதிவாதி ஆட்சேபணை செய்தார் என்றால் இல்லை. நான் சவுக்கு நடவு செய்ததால் 25.11.2024ல் நிலஅளவைக்கு பிரதிவாதி நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் இல்லை.

6. திருத்தணி காவல்நிலையத்தில் இதுகுறித்து புகார் அளித்தார் என்றால் இருவரும் கொடுத்தோம். நாங்கள் முதலில் கொடுத்த புகாரில் இருவரையும் உரிமையியல் நீதிமன்றம் சென்று பார்த்து கொள்ள சொன்னார் என்றால் சரிதான். பிரதிவாதி மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தார் என்றால் நானும் கொடுத்தேன். அவரும் கொடுத்தார். அவ்வாறு நான் புகார் கொடுத்ததை காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. ஆனால் நான் புகார் கொடுத்தேன். 29.11.2024ல் பிரதிவாதி மீண்டும் சொத்தை அளக்க வட்டாட்சியருக்கு மனு கொடுத்து காவல் உதவியுடன் வழக்கு சொத்து அளவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது தெரியுமா என்றால் தெரியும். ஆனால் அளவீடு செய்யவில்லை.

7. 20.12.2024ல் பிரதிவாதி நிலத்தை அளவீடு செய்ய இருப்பதாக எனக்கு முன்கூட்டியே தகவல் அளித்தார் என்றால் எனக்கு அறிவிப்பு வரவில்லை. நான் அந்த அறிவிப்பை பெற்றுள்ளேன் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் அந்த அறிவிப்பை பெற்றுக்கொண்டுதான் ஆதாரம் இல்லாத இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் சவுக்கு செடியை பிடுங்கிவிட்டதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். நிலத்தை அளவீடு செய்யும்போது இந்த வழக்கில் நான் பெற்ற தடை உத்தரவை காண்பித்து அளவீடு செய்வதை நிறுத்திவிட்டேன் என்றால் சரிதான். நான் எனது நிலத்திற்கு மட்டும்தான் தடை உத்தரவு பெற்றுள்ளேன் என்றாலும் பிரதிவாதி நிலத்திற்கு தடை உத்தரவு பெறவில்லை என்றாலும் நான் அனுபவித்து வரும் நிலத்திற்குதான் தடை உத்தரவு பெற்றேன்.

8. பிரதிவாதி அவரது நிலமான புல எண்.118/19, 118/20ஐதான் அளவீடு செய்ய வந்தார் என்றாலும் நான் புல எண்.118/18க்கு பெற்ற உத்தரவை காண்பித்து அளவீடு செய்யவிடாமல் தடுத்துவிட்டேன் என்றாலும் என் நிலத்திற்கு பெற்ற

உத்தரவைதான் நான் காண்பித்தேன். பிரதிவாதி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.23/2025ஐ என் மீதும் கண்ணப்பன் மகன் வெங்கடேசன் மீதும் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இந்த பிரதிவாதி அந்த வழக்கில் தனது நிலத்தை அளவீடு செய்ய நீதிமன்ற ஆணையர் நியமணம்கோரி மனுதாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். அந்த வழக்கும் நீதிமன்ற ஆணையர் நியமண மனுவில் நான் மறுப்புரை தாக்கல் செய்ய இன்று விசாரணைக்கு வருகிறது என்றால் ஆமாம்.

9. மாவட்ட ஆட்சியரிடம் பிரதிவாதி கொடுத்த மனுவின் அடிப்படையில் காவல் உதவியுடன் வழக்கு சொத்தை பிரதிவாதி அளவீடு செய்தார்கள் என்றாலும் அந்த சமயம் என் மகன் வினோத் அங்கு இருந்தார் என்றாலும் இல்லை. அவ்வாறு அளவீடு செய்து நான் ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலத்தை அத்து காட்டி வருவாய் அதிகாரிகள் சென்றுள்ளனர் என்றால் சவுக்கு செடியை வைத்த பின்பு மிதித்து நாசம் செய்துள்ளனர். அவர்கள் கிரையம் வாங்கிய போதே அளந்திருக்க வேண்டும். அவ்வாறு அத்து காண்பித்த பின்பு பிரதிவாதி பெரியசாமி ஒரு வெள்ளை கல்லை அந்த அத்தில் நட்டுள்ளார் என்றால் ஆமாம். அன்றைய தினம் நான் பார்க்கவில்லை. மறுநாள்தான் பார்த்தேன்.

10. நான் பார்த்தவுடன் அந்த கல்லை உடைத்து சேதப்படுத்தினேன் என்றால் அவர்கள் சேதப்படுத்தினார்கள். நானும் செய்தேன். இதுகுறித்து காவல் துறையில் பிரதிவாதி புகார் கொடுத்தார் என்றால் அவரும் கொடுத்தார். என் நிலத்தை சேதம் செய்தார் என்று நானும் கொடுத்தேன். தற்போது வரை அந்த விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். காவல்துறை விசாரணையில் எனக்கு உரிமை இல்லாத நிலத்தில் நான் ஆக்கிரமிப்பு செய்ததாக கூறினார்கள் என்றால் நாங்கள் 100 வருடங்களுக்கு மேலாக அனுபவிக்கிறோம். அவர் கிரையம் வாங்கியே 22 வருடங்கள் தான் ஆகிறது. எனக்கும் அவர்களுக்கும் 6 அடி வித்தியாசம் உள்ளது.

11. பட்டா நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் உரிமையில்லாத நிலத்தில் என் அனுபவம் செல்லாது என்றாலும் எனக்கும் அவர்களுக்கும் 6 அடி வித்தியாசம் உள்ளது. எனது நிலம்மேட்டிலும் அவர்கள் நிலம் பள்ளத்திலும் உள்ளது. 200 செடியை சேதப்படுத்தியதால் ரூ.20,000 கொடுக்கவேண்டும் என நான் எனது வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றாலும் நான் பிரதிவாதி நிலத்தில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் நான்தான் இழப்பீடு கொடுக்க

கடமைப்பட்டுள்ளேன் என்றாலும் அவர் நிலம் வாங்கும்முன்பே அருகில் உள்ளவர்களிடம் கேட்டு நிலம் வாங்கியிருக்க வேண்டும்.

12. நான் சொல்வதுபோல் அருகில் உள்ள நிலத்துக்காரர்களை கேட்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் ஆவணங்களை சரிபார்த்தாலே போதும் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி வெள்ளை கல், கம்பி வேலிகளை சேதப்படுத்தியதால் நான்தான் பிரதிவாதிக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை அலைக்கழிவு செய்யவேண்டி எந்த முகாந்திரமும் இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)